THE HINDU

PAGE NO: 02 DATE: 26.07.2023



# Pondicherry University to implement NEP from this academic year

The policy promotes a multi-disciplinary approach that encourages students to explore various subjects, says V-C Gurmeet Singh; he rejects allegation that NEP is an attempt to impose Hindi

The Hindu Bureau
PUDUCHERRY

Pondicherry University has started the process of implementing the National Education Policy in the courses offered on its campus and at all affiliated colleges from the current academic year.

Announcing the decision at a press conference on Tuesday, Vice-Chancellor Gurmeet Singh said one of the key features of the NEP was the multiple entry and exit options for undergraduate students. They can get a certificate if they wish to exit the course after one year. Students who drop out mid-way can reenter the academic stream after some time at any university or college of his/her choice. The NEP allowed students to create an account in the Academic Bank of Credits (ABC) portal, he said.

The ABC, he said, will store the course details and grades of students. A student who wishes to get back to education after a break can carry forward his/her credit. Several institutes are connected to the portal and the student will have the option of doing a different course during the mid-entry. The Pondicherry University and its affiliated colleges had started the process of creating the ABC portal, he added.

"The policy recognises the importance of holistic development to foster the cognitive, socio-emotional and physical skills of students. It promotes a multidisciplinary approach that encourages students to explore various subjects. The NEP lays the right kind of emphasis on the mother tongue. It does not impose any language, and there is complete freedom to the student to choose the language," he added.



Pondicherry University V-C Gurmeet Singh addressing a press conference on Tuesday. S.S. KUMAR

On the allegation that the NEP was an attempt to impose Hindi, the Vice-Chancellor said, "It is not at all true. The NEP gives maximum importance to the mother tongue. The policy gives students the option to learn more than one language. The Tamil language is the oldest and richest and we should promote it. The students should encash the opportunity. There is no scope for hatred of any language," he said.

Asked about the demand for implementation of 25% reservation for local students at Pondicherry University, the Vice-Chancellor said the quota was followed in admission to several courses. Even in courses where the reservation was not implemented, the representation of local students was 35%-40%, he said.

"So there is no need to restrict the quota to 25%. Anyway, we have taken up with the Ministry the demand for reservation for local students. The Ministry is considering it," he said.

THE NEW INDIAN EXPRESS

PAGE NO: 03

DATE: 26.07.2023

# Pondy Univ, affiliated colleges to adopt NEP

## Institution set to introduce four-year undergraduate programme for all courses from current academic year: V-C

**EXPRESS NEWS SERVICE**
@ Puducherry

IN a significant move towards aligning with the National Education Policy 2020 (NEP), Pondicherry University is set to introduce the Four-Year Undergraduate Programme (FYUP) for all its courses in the academic year 2023-2024. Vice-chancellor Gurmeet Singh announced this decision at a press conference held on Tuesday.

The implementation of the academic bank of credit will be a central feature in all schools, departments, centres, and affiliated colleges, encompassing all academic courses. This approach will enable students to have multiple entry and exit options, with the opportunity to receive a certificate at the end of first year (two semesters) or a diploma at the end of second year (four semesters). At the end of third year (six semesters), a certificate equivalent to the bachelor's degree will be provided. A four-year bachelor's degree certificate will be awarded after finishing an eight-semester programme and a research project.

This means that, in case a student have to temporarily discontinue education, they will still receive a certificate or diploma based on the duration of their study. They can resume studies later and complete the course as per convenience.



Gurmeet Singh, vice chancellor of Pondicherry University addressing a press meet on Friday | SRIRAM R

Gurmeet Singh emphasised that the curriculum will be designed to empower students and encourage practical application of knowledge. The degrees offered will be holistic, multi-disciplinary, and flexible, allowing for various combinations of subjects to cater to individual preferences. The conventional boundaries between subjects will be dissolved to provide students with greater freedom of choice.

The implementation aims to foster collaboration between institutions by permitting students to shift to other courses of their choice, depending on seat availability in other institutions that have adopted NEP.

To facilitate the successful implementation of the NEP, the V-C has directed the principals of around 101 colleges affiliated with the university in both Puducherry and Andaman & Nicobar Islands to begin new framework. "There are some initial hiccups but there is no going back from the implementation," said the V-C.

Addressing the issue of financial constraints, he said the current allocation of funds was insufficient. The university has approached the University Grants Commission to enhance grants by 10% and plans to increase the endowment fund from ₹5 lakh to ₹10 lakh to support its proposals.

HINDU TAMIL

PAGE NO: 01 DATE: 26.07.2023

புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகம், இணைப்புக் கல்லூரிகளில்

# நடப்பாண்டு முதல் புதிய கல்விக்கொள்கை அமல்

**இளநிலைப் பட்டப்படிப்புகளை இனி 4 ஆண்டுகள் பயில வேண்டும்**

● புதுச்சேரி

புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகம் மற்றும் அதன் அனைத்து இணைப்புக் கல்லூரிகளில் நடத்தப்படும் அனைத்து பாடப்பிரிவுகளிலும் நடப்பு கல்வியாண்டு முதல் புதிய தேசியக் கல்விக் கொள்கை அமல்படுத்தப்படுகிறது.

இதுதொடர்பாக புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் துணைவேந்தர் குர்மீத் சிங் கூறியதாவது:

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் நடப்பு கல்வியாண்டில் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்துகிறது. அத்துடன் பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ள 101 கல்லூரிகளிலும் இந்த முறை அமலாகும். அவர்களுக்கு தேவைப்படும் உதவிகளை செய்ய உள்ளோம்.

புதிய கல்விக்கொள்கை அமலாவதால், இளநிலைப் பட்டப்படிப்புகளை இனி நான்கு ஆண்டுகள் பயில வேண்டும். தேசிய கல்விக்கொள்கையில் இளங்கலை பயிலும் மாணவர்கள் அவர்கள் விருப்பப்படும் நேரத்தில் வெளியேறலாம். மாணவர்கள் ஒரு வருடம் கழித்து படிப்பை விட்டு வெளியேற விரும்பினால் சான்றிதழ் பெற அனுமதிக்கப்படுகிறது. பாதியில் படிப்பை நிறுத்தும் மாணவர்கள், தங்கள் விருப்பப்படி அல்லது வசதிக்கேற்ப ஏதேனும் ஒரு பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் சிறிது காலம் கழித்து கல்விப் படிப்பை தொடரலாம்.

'அகாடமிக் பாங்க் ஆஃப் கிரெடிட் போர்ட்டல்' (ஏபிசி) என்ற அமைப்பில் கணக்கு உருவாக்க மாணவர்களை இக்கல்விக்கொள்கை அனுமதித்துள்ளது. மாணவர்களின் பாட விவரங்கள் மற்றும் தரம் தொடர்பான தகவல்களின் களஞ்சியமாக இந்த ஏபிசி செயல்படும்.

ஒரு இடைவேளைக்குப் பிறகு கல்விக்குத் திரும்ப விரும்பும் ஒரு மாணவர், பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் சேரும்போது அவர்கள் விட்ட இடத்தில் இருந்து படிப்பைத் தொடரலாம். பல கல்வி நிறுவனங்கள் இந்த போர்ட்டலுடன் இணைக்கப்பட்டுள்ளன.

மேலும் மாணவர் இடைநிலைக் கல்வியின்போது வேறு பாடத்தை மேற்கொள்ள விருப்பம் இருந்தால் அதைத் தொடரலாம். புதுச்சேரி பல்கலைக்கழகம், அதனுடன் இணைந்த கல்லூரிகள் ஏபிசி போர்ட்டலை உருவாக்கும் செயல் முறையைத் தொடங்கியுள்ளன. இது மாணவர் இடைநிற்றலை ஊக்குவிப்பதாக அமையாது.

**மொழி திணிப்பு இல்லை**

மாணவர்களின் அறிவாற்றல், சமூக உணர்ச்சி மற்றும் உடல் திறன்களை வளர்ப்பதற்கு முழுமையான வளர்ச்சியின் முக்கியத்துவத்தை இந்த கல்விக் கொள்கை அங்கீகரிக்கிறது.

புதிய கல்விக்கொள்கை தாய்மொழிக்கு சரியான விதத்தில் முக்கியத்துவம் அளிக்கிறது. இது எந்த மொழியையும் திணிக்கவில்லை. மேலும் மொழியைத் தேர்ந்தெடுக்க மாணவருக்கு முழு சுதந்திரம் அளிக்கிறது.

இது, இந்தியை திணிக்கும் முயற்சி என்பது உண்மையல்ல. தாய்மொழிக்கு அதிகபட்ச முக்கியத்துவம் அளிக்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்கும் வாய்ப்பையும் வழங்குகிறது. தமிழ் மொழி மிகவும் பழமையானது மற்றும் வளமானது, மொழியை நாம் வளர்க்க வேண்டும். வாய்ப்பை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எந்த மொழி மீதும் வெறுப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

புதியக் கல்விக் கொள்கையானது பொதுக் கல்வியுடன் தொழிற்கல்வியை ஒருங்கிணைக்கிறது, அனைத்து துறைகளிலும் திறன்களை ஒருங்கிணைக்கிறது, தொழில்நுட்பம் மூலம் கற்றல், தொழில்முனைவு, தொடர்ச்சியான மதிப்பீடு, பிராந்திய மொழிகளில் திறன்களை மேம்படுத்துதல், பயிற்சி மூலம் சோதனை கற்றல் ஆகியவற்றுக்கு உதவுகிறது.

கண்டிப்பாக இந்தக் கல்வியாண்டில் அனைத்துக் கல்லூரிகளும் இதைச் செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

செய்தியாளர் சந்திப்பின்போது இயக்குநர் (கல்வி), பேராசிரியர் கே.தரணிக்கரசு, சிறப்பு அதிகாரி (கலாச்சார உறவுகள்) பேராசிரியர் ராஜீவ் ஜெயின், பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் ரஜ்னீஷ் பூடானி ஆகியோர் உடனிருந்தனர்.




புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில், புதிய தேசிய கல்விக் கொள்கையை நடப்பாண்டில் நடைமுறைப்படுத்துவது குறித்து அறிவித்த துணைவேந்தர் குர்மீத் சிங். படம்: செ. ஞானபிரகாஷ்

DINAMALAR

PAGE NO: 02

DATE: 26.07.2023

# புதுச்சேரி மத்திய பல்கலையில் தேசிய கல்விக் கொள்கை அமல்

## துணை வேந்தர் குர்மீத் சிங் அறிவிப்பு

**புதுச்சேரி, ஜூலை 26–**

'புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைப்பு கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டு முதல், தேசிய கல்விக் கொள்கை அமல்படுத்தப்படுகிறது' என துணை வேந்தர் குர்மித்சிங் கூறினார்.

இது குறித்து அவர் கூறியதாவது.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைப்பு கல்லூரிகள் 101ல், இந்தாண்டு முதல் தேசிய கல்விக் கொள்கை அமல்படுத்தப்படுகிறது. அதனுடன் 4 புதிய ஒருங்கிணைந்த பாடங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இளங்கலை படிப்புகள் இனி 4 ஆண்டுகளாகும். ஆனால் அதில் சேருவோர் விரும்பும் நேரத்தில் வெளியேறலாம். ஓராண்டு படித்து முடித்து வெளியேறினால் சான்றிதழ் பெற அனுமதிக்கப்படுகிறது.

பொருளாதார பிரச்னை, உடல் நலம் உள்ளிட்ட ஏதேனும் ஒரு காரணத்திற்காக பாதியில் படிப்பை நிறுத்தும் மாணவர்கள் தங்கள் விருப்பப்படி அல்லது வசதிக்கேற்ப ஏதேனும் ஒரு பல்கலையில் சில ஆண்டுகள் கழித்து கூட படிப்பை தொடரலாம்.



■ புதுச்சேரி பல்கலையில், தேசிய கல்விக் கொள்கை இந்த கல்வி ஆண்டிலேயே துவங்குவதாக துணைவேந்தர் குர்மித் சிங் நேற்று பேட்டி அளித்தார்.

மாணவர்களை அகாடமிக் பாங்க் ஆப் கிரெடிட் போர்ட்டலில் (ஏ.பி.சி.) கணக்கு உருவாக்க இக்கல்விக்கொள்கை அனுமதித்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட இடைவேளைக்குப் பிறகு மீண்டும் கல்வி பயில திரும்பும் மாணவர், அவர்கள் விட்ட இடத்திலிருந்து படிப்பை தொடரலாம்.

பல கல்வி நிறுவனங்கள் இந்த போர்ட்டலுடன் இணைக்கப்பட்டுள்ளன. புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் இணைப்பு கல்லூரிகள் 'ஏபிசி போர்ட்டலை' உருவாக்கும் செயல்முறையை துவங்கியுள்ளன. இது மாணவர் கல்வி இடைநிற்றலை ஊக்குவிப்பதாக அமையாது. பல்வேறு பாடங்களை ஆராய மாணவர்களை ஊக்குவிக்கும்.

புதிய கல்விக்கொள்கை தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. மொழியைத் தேர்ந்தெடுக்க மாணவருக்கு முழு சுதந்திரம் அளிக்கிறது. மேலும், ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளை கற்கும் வாய்ப்பை தருகிறது.

புதிய கொள்கையானது தொழிற்கல்வியை பொதுக் கல்வியுடன் ஒருங்கிணைக்கிறது. புதுச்சேரி மத்திய பல்கலையில் புதுச்சேரி மாநில மாணவர்களுக்கு 25 சதவீத இடஒதுக்கீடு அமல்படுத்த கோரிக்கை விடுக்கின்றனர். ஆனால், பல பாட பிரிவுகளில் உள்ளூர் மாணவர்கள் 35 முதல் 40 சதவீதம் பேர் படிக்கின்றனர். எனவே, 25 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. எப்படி இருந்தாலும் உள்ளூர் மாணவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அமைச்சகத்திற்கு எடுத்து சென்றுள்ளோம்.

இந்தாண்டு முதல் செமஸ்டர் தேர்வுகள் உரிய நேரத்தில் நடத்தப்படும். பல்கலைக்கான நிதியை 10 சதவீதம் உயர்த்தி வழங்க கோரிக்கை விடுத்துள்ளோம். கல்வி தர வரிசை கணக்கீடு பட்டியலில் தற்போது கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை கூடிவிட்டதால், புதுச்சேரி பல்கலை பின்தங்கியது போல் தெரிகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

பதிவாளர் ராஜ்னிஷ் புட்னி, பேராசிரியர்கள் தரணிக்கரசு, ராஜிவ்ஜெயின், மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் உடனிருந்தனர்.

DINAMANI

PAGE NO: 12 DATE: 26.07.2023

# புதுவை பல்கலை.யில் நிகழாண்டில் தேசிய கல்விக் கொள்கை அமல்

## துணைவேந்தர் குர்மீத் சிங்



புதுச்சேரியில் செய்தியாளர்களுக்கு செவ்வாய்க்கிழமை பேட்டியளித்த புதுவை மத்திய பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங். உடன் பதிவாளர் ரஜ்னீஷ் பூடானி, கல்விக் குழு இயக்குநர் தரணிக்கரசு.

**புதுச்சேரி, ஜூலை 25:** புதுவை மத்திய பல்கலைக்கழகம், அதன் இணைப்புக் கல்லூரிகளில் நிகழாண்டில் தேசிய கல்விக் கொள்கை அமல்படுத்தப்படும் என்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங் தெரிவித்தார்.

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

நாட்டில் அனைத்து மத்திய பல்கலைக்கழகங்களிலும் நிகழ் கல்வியாண்டில் (2023–34) தேசிய கல்விக் கொள்கை செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, புதுவை மத்திய பல்கலைக்கழகம், அதைச் சார்ந்த 101 இணைப்புக் கல்லூரிகளிலும் தேசியக் கல்விக் கொள்கை செயல்படுத்தப்படும். இதில், தாய்மொழியில் கல்வி கற்க முக்கியத்துவம் அளிக்கப்படும்.

தேசிய கல்விக் கொள்கையுடன் 4 புதிய ஒருங்கிணைந்த பாடங்களும் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. இளநிலை பட்டப் படிப்புகள் இனி 4 ஆண்டுகள் கற்றுத் தரப்படும். அதில் சேர்ந்தவர்கள் விருப்ப அடிப்படையில் அதிலிருந்து விலகி வேறு பணிக்குச் செல்லலாம். அப்போது, சான்றிதழ் தரப்படும். அதன்பிறகு, ஓராண்டு கழித்துகூட மீண்டும் வந்து படிப்பைத் தொடரலாம். அவர்கள் தாங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் அந்தப் படிப்பையே தொடரலாம்.

மாணவர்களின் வசதிக்காக 'அகாதெமிக் பேங்க் ஆஃப் கிரெடிட் போர்ட்டலில்' (ஏபிசி) கணக்கு உருவாக்கிக் கொள்ளலாம். இந்த ஏபிசி என்னும் கணக்கானது, சம்பந்தப்பட்ட மாணவரின் பாட விவரங்கள், தரம் தொடர்பான தகவல் தொகுப்பை உள்ளடக்கியிருக்கும். புதுவை பல்கலைக்கழகமும், அதனுடனான கல்லூரிகளும் இந்த வசதியை ஏற்படுத்தி வருகின்றன.

தேசிய கல்விக் கொள்கையானது மாணவர்களின் அறிவாற்றல், சமூகப் பொறுப்புணர்வு, உடல் திறனை வளர்ப்பதற்கானதாக உள்ளது. தாய்மொழியுடன், விரும்பும் மொழியைத் தேர்வு செய்துகொள்ளலாம்.

இதில், ஹிந்தி மொழி திணிப்பு இல்லை. இந்தக் கல்விக் கொள்கையானது, தொழில் கல்வியை பொதுக்கல்வியுடன் ஒருங்கிணைப்பதாக உள்ளது.

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் உள்ளூர் மாணவர்களுக்கு 25% இடஒதுக்கீடு பல துறைகளில் செயல்படுத்தப்படுகிறது. ஆனால், அதற்கும் மேலாக, உள்ளூர் மாணவர்களின் சேர்க்கையானது 35% முதல் 40% வரை உள்ளது. நிகழாண்டு கல்லூரிகளில் பருவத் தேர்வுகள் முறையாக நடத்தப்படும்.

மத்திய அரசிடம் பல்கலைக்கழகத்துக்கான நிதியை 10% கூடுதலாக உயர்த்தித் தர கோரியுள்ளோம். தரவரிசைக் கணக்கீட்டில் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை கூடுதலாகி விட்டதால், புதுவை பல்கலைக்கழக தரவரிசையும் பின்தங்கியது போல தெரிகிறது என்றார் குர்மீத் சிங்.

பேட்டியின்போது, கல்விக் குழு இயக்குநர் கே.தரணிக்கரசு, பேராசிரியர் ராஜீவ் ஜெயின், பதிவாளர் ரஜ்னீஷ் பூடானி, மக்கள் தொடர்பு அதிகாரி க.மகேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

DAILY THANTHI

PAGE NO: 09

DATE: 26.07.2023

### புதுவை பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளில்

# நடப்பாண்டு முதல் புதிய கல்விக்கொள்கை அமல்

## துணைவேந்தர் தகவல்

புதுச்சேரி, ஜூலை.26-

புதுவை பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் நடப்பாண்டு முதல் புதிய கல்விக் கொள்கை அமல்படுத்தப்படுவதாக துணை வேந்தர் கூறினார்.

### புதிய கல்விக்கொள்கை

புதிய கல்விக்கொள்கையை அறிமுகப்படுத்தி உள்ள மத்திய அரசு இதை அமல்படுத்துமாறு மாநிலங்களை வலியுறுத்தி வருகிறது. ஆனால் தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்கள் புதிய கல்விக்கொள்கையை ஏற்க மறுத்து வருகின்றன.

புதுவையில் நடப்பு கல்வியாண்டு 7, 8, 9, 11-ம் வகுப்புகளில் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தை அமல்படுத்துவதற்கே அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. புதிய கல்விக் கொள்கையை புகுத்த புதுவை பல்கலைக்கழகம் முயற்சிப்பதாக கூறி அதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் புதுவை பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைப்பு கல்லூரிகளில் நடப்பாண்டு (2023-24) முதல் புதிய கல்விக்கொள்கையை அமல்படுத்தப்படுவதாக துணைவேந்தர் குர்மீத் சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறியதாவது:-

### மொழி திணிப்பு இல்லை

புதுவை பல்கலைக்கழகம் தேசிய கல்விக்கொள்கை 2020-ஐ அனைத்து துறைகள், மையங்கள், இணைப்பு கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டு முதல் அமல்படுத்துகிறது. இந்த கல்விக் கொள்கையானது வரலாற்று சிறப்புமிக்க வளர்ச்சிக்கு வழிவகுக்கும். மாணவர்களின் திறன் மேம்படும். தொழில்நுட்பம், ஆய்வு அடிப்படையிலான கல்வி, உலகளாவிய போட்டி, மொழி அறிவு ஆகியவற்றை மேம்படுத்த உதவும்.

புதிய கல்விக்கொள்கை என்பது பிற மொழி திணிப்பு ஆகாது. தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும். இதன் மூலம் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளை மாணவர்கள் கற்றுக்கொள்ள வாய்ப்பு உருவாகும்.

### இடஒதுக்கீடு

புதிய கொள்கையின்படி ஒரு மாணவர் ஒரு படிப்பில் சேர்ந்துவிட்டு ஏதோ ஒரு காரணத்தால் கல்வியை தொடர முடியாவிட்டால் அதன்பின் அனுமதிபெற்று மீண்டும் அதே படிப்பில் சேர்ந்து கற்கலாம். புதிய கல்விக்கொள்கையானது அனைத்து துறைகளிலும் திறன்களை ஒருங்கிணைக்கிறது.

புதுவை பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்க்கையின் போது பல பாடப்பிரிவுகளில் சேர்க்கைக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. புதுவை மாநிலத்தை சேர்ந்த மாணவர்களுக்கு 25 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஆனால் உண்மையிலேயே புதுவை மாணவர்கள் சேர்க்கை 35 முதல் 40 சதவீதம் வரை உள்ளது.

இருந்தபோதிலும் அனைத்து பிரிவுகளிலும் புதுச்சேரி மாநில மாணவர்களுக்கு 25 சதவீத இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை மத்திய மனிதவள அமைச்சகத்தின் கவனத்துக்கு எடுத்து சென்றுள்ளோம். அவர்கள் அந்த கோரிக்கையை பரிசீலித்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

### 4 ஆண்டு 'ஹானர்ஸ்' பட்டப்படிப்பு

புதிய கல்விக்கொள்கையின்படி, கலை அறிவியல் கல்லூரிகளில் படிப்பு காலம் 4 ஆண்டு ஆகும். அவர்கள் 3-ம் ஆண்டு முடித்தாலே பட்டப்படிப்பு சான்றிதழ் வழங்கப்படும். 4-வது ஆண்டு படித்தால் 'ஹானர்ஸ்' பட்டம் வழங்கப்படும்.

ஒரு மாணவர் ஏதாவது ஒரு பட்டப்படிப்பில் சேர்ந்துவிட்டு ஓராண்டு படித்துவிட்டு பின்னர் வேறு ஏதேனும் படிப்புக்காக வேறு கல்லூரிகளில் சேர்ந்து படித்துவிட்டு மீண்டும் முதலில் விட்ட படிப்பை 2-ம் ஆண்டில் சேர்ந்து படிக்கலாம். கலை அறிவியல் படிப்புகளில் இப்போது 2-வது ஆண்டுவரை மொழிப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்விக் கொள்கையின்படி முதல் ஆண்டில் மட்டுமே மொழிப்பாடங்கள் இருக்கும்.

புதுவை பல்கலைக்கழகத்தின் கீழ் புதுச்சேரி மட்டுமல்லாது அந்தமான், நிகோபர் உள்ளிட்ட யூனியன் பிரதேசங்களில் 100-க்கும் மேற்பட்ட இணைப்பு கல்லூரிகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. புதுவை மாநிலத்தை பொறுத்தவரை 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 9 தனியார் கல்லூரிகள் என 21 கல்லூரிகள் உள்ளன.

DINAKARAN

PAGE NO: 16

DATE: 26.07.2023

புதுவை பல்கலைக்கழகத்துக்கு

# ஒன்றிய அரசின் நிதி உதவி போதுமானதாக இல்லை

## துணைவேந்தர் குர்மீத் சிங் வேதனை

**புதுச்சேரி, ஜூலை 26:** புதுச்சேரி மாநிலத்தில் உள்ள மத்தியப் பல்கலைக்கழகத்திலும், அதனுடைய இணைப்பு மற்றும் உறுப்பு கல்லூரிகளில் தேசியக் கல்விக்கொள்கை நடப்பு கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்படவுள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் நிருபர்களிடம் கூறியதாவது:

புதிய தேசிய கல்விக் கொள்கையில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் விருப்பப்படும் நேரத்தில் வெளியேறலாம். சில ஆண்டுகள் கழித்து படிப்பை விட்ட இடத்திலிருந்தே தொடர முடியும். ஏதோ ஒரு காரணத்தால் படிப்பை இடைநிறுத்தம் செய்யும் மாணவர்கள், தங்கள் விருப்பப்படி அல்லது வசதிக்கேற்ப ஏதேனும் ஒரு பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் மீண்டும் தொடர முடியும். இதற்காக அகாடமிக் பாங்க் ஆப் கிரெடிட் போர்ட்டலில் தனிக்கணக்கு உருவாக்க அனுமதித்துள்ளது. எந்த ஒரு வயதிலும், ஒரு இடைவேளைக்குப் பிறகு கல்விக்குத்திரும்பலாம். இதற்காக நாட்டில் பல கல்வி நிறுவனங்கள் போர்ட்டலுடன் இணைக்கப்பட்டுள்ளன. மாணவர் இடைநிலைக் கல்வியின் போது வேறு பாடத்தை மேற்கொள்ள விருப்பம் இருந்தால், அதையும் தொடர புதிய கல்வி கொள்கை அனுமதிக்கிறது.

தாய்மொழிக்கு சரியான விதத்தில் முக்கியத்துவம் அளிக்கிறது. இது எந்த மொழியையும் திணிக்கவில்லை, மேலும் மொழியைத் தேர்ந்தெடுக்க மாணவருக்கு முழு சுதந்திரம் அளிக்கிறது. இந்தியை திணிக்கும் முயற்சி என்பது உண்மையல்ல. தாய்மொழிக்கு அதிகபட்ச முக்கியத்துவம் அளிக்கிறது.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழத்தில் அனைத்து பாடப்பிரிவுகளிலும் 35% முதல் 40% வரை உள்ளூர் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். அதனை 25 சதவீதம் என கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. எப்படியிருந்தாலும், உள்ளூர் மாணவர்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சகத்திடம் எடுத்து சென்றுள்ளோம்.

தரவரிசை பட்டியலில் புதுச்சேரி பல்க்லைக்கழகத்துக்கு பின்னடைவு என்பது ஏற்கும்படியாக இல்லை. பெருகி வரும் தனியார் பல்கலைக்கழகத்தோடு ஒப்பிட்டு இந்த பட்டியலை வெளியிடுகிறார்கள். உண்மையில் எங்களின் தரவரிசைக்கான மதிப்பு அதிகரித்துதான் உள்ளது. நாட்டில் உள்ள மத்திய பல்கலைகழகத்தோடு ஒப்பிடுகையில் 20வது இடத்தில் இருந்து, 7 வது இடத்துக்கு புதுவை பல்கலைக்கழகம் முன்னேறியுள்ளது. தரவரிசை பட்டியல் வெளியீடு தொடர்பாக எங்களின் ஆட்சேபனையை ஒன்றிய அரசிடம் தெரிவித்துள்ளோம். அதோடு பல்கலைகழகத்துக்கான நிதி உதவி போதுமானதாக இல்லை. 10 சதவீதம் உயர்த்தி தர வேண்டும் என்பதை கோரிக்கையாக வைத்திருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.